18

# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

அசல் மனு எண். 897/2016/ந
ஆணை எண். 159/2016
நாள் : 05/10/2016

31.08.2016 நாளிட்ட "தினமலர்" மற்றும் "தினகரன்" நாளிதழ் செய்தி – முறை மன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையர்,
பூந்தமல்லி நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை

31.08.2016 நாளைய "தினமலர்"மற்றும் "தினகரன்" நாளிதழ்களில் பூந்தமல்லி நகராட்சியில் சில பகுதிகளில் கழிவு நீர் தேக்கமடைந்து அகற்றப்படாமல் உள்ளதாக வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7ன் கீழ் இம்முறைமன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாக பதிவு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. மேற்படி பத்திரிகைச் செய்திகளில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான நிலை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தான அறிக்கையினை ஆவணங்கள் / புகைப்படங்களின் நகல்களுடன் இரண்டு நாட்களுக்குள் தாக்கல் செய்திடுமாறு பூந்தமல்லி நகராட்சி ஆணையருக்கு 31.08.2016 அன்றே ஆணையிடப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் அறிவிப்பாணை அனுப்பப்பட்டது. தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கும் வலியுறுத்தப்பட்டது.

3. பூந்தமல்லி நகராட்சி ஆணையரது விரிவான பதிலறிக்கை 15.09.2016 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள விளக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளின் விவரங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. இப்பொருள் தொடர்பான கடிதங்களின் நகல்கள் மற்றும் புகைப்படங்களின் நகல்களும் பரிசீலினைக்குட்படுத்தப்பட்டன. மேற்படி அறிக்கையின் இறுதியில் தற்சமயம் எந்த இடத்திலும் தண்ணீர் தேங்காமல் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறதென உறுதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்முறைமன்ற நடுவம் மேல் நடவடிக்கையை கைவிடலாமென முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/11/2016
செயலாளர்.

பெறுநர்
நகராட்சி ஆணையர்,
பூந்தமல்லி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம், சென்னை – 56.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
தாம்பரம்.